**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்**
**அசல் வழக்கு எண்.229/2018**

**2021 ஆண்டு பிப்ரவரி மாதம் 1 ம் நாள்**

சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி **செல்வி.ஆர். வைஷ்ணவி.பி.ஏ.,பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி** அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தங்கம்மாள் | வயது | |
| க.பெ. | | மதம் | |
| முகவரி | | தொழில் | |

<u>**நான் இந்த வழக்கில் வாதி தரப்பு 1ம் சாட்சி (PW1)**</u> <u>(01.02.2021)</u>

<u>**3 மற்றும் 4 ஆம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை**</u>

எனக்கும் எனது கணவரான ராகவன் என்பவருக்கும் திருமணம் ஆனதற்கு ஆதரவாக எந்த ஒரு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை. எங்கள் இருவரம் வீட்டில் திருமணம் நடைபெற்றது. எங்களுக்கு ஈடிக்கி மாவட்டம், கம்பம் மேட்டில் நடைபெற்றது. ராகவன் சொந்த ஊர் குருவாயூர், கேரளா மாநிலம் ஆகும். ராகவன் பெற்றோர் குருவாயூரில் இருந்தனர் ஆனால் தற்போது உயிருடன் இல்லை. எனது கணவரின் சொந்த ஊர் குருவாயூர் கேரளா மாநிலம் என்பதால் அங்குதான் நான் அவரின் வாரிசு சான்றிதழ் கோரி வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்றால் நான் இங்கு வசித்து வருவதால் இங்கு தாக்கல் செய்துள்ளேன். இறந்வரின் நிரந்தர முகவரி எங்கோ அங்கு தான் வாரிசு சான்றிதழ் பெற வேண்டும் என்றால் நான் இங்கு வசித்து வருவதால் நான் இந்நீதிமன்றத்தில் வழக்கினை தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ.5 அசல் அல்ல என்றும், வண்ண நகல் என்றால் சரியல்ல, நான் வா.த.சா.ஆ.5 ஆவணத்தின் அசலை தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ.2 ஆவணத்தில் எனது முகவரி தேனீ மாவட்டம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ. 3 ஆவணத்தில்

எனது மகள் ஆதார் அட்டையின் ஜெராக்ஸ் நகலில் தந்தை பெயர் ராகவன் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான், ஆனால் கணவரின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது, அவரின் முகவரி பல்லடம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ. 6 என் ஆவணம் என்றால் எனது மகள் சசிகலாவின் பள்ளி அடையாள அட்டை ஆகும். எனது மகள் மதுரையில் உள்ள பள்ளியில் படித்தார் என்றால் உசிலம்பட்டி, மதுரை மாவட்டத்தில் படித்தார். என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ. 7 ஆவணம் எனது இளைய மகள் தனலெட்சுமியின் பள்ளி மாற்று சான்றிதழ் என்றால் சரிதான், எனது இளைய மகளும் மதுரை மாவட்டத்தில் உள்ள பள்ளியில் படித்தார் என்றால் சரிதான். நானும் எனது மகள்களான 2 மற்றும் 3 ஆம் வாதிகள் திருப்பூரில் வசித்து வருகிறோம் என்பதற்கு ஆதரவாக எந்த ஒரு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, நான் தாக்கல் செய்துள்ளேன். நான் வட்டாட்சியரிடம் எனது கணவரான ராகவன் வாரிசு சான்றிதழ் கோரி விண்ணப்பம் கொடுத்த போது 1 மற்றும் 2 பிரதிவாதிகளின் பெயரை சேர்த்து விண்ணப்பம் கொடுத்தேனா என்றால் இல்லை. 1 ஆம் பிரதிவாதிக்கும் ராகவனுக்கும் எப்போது திருமணம் நடைபெற்றது என்று தெரியுமான என்றால் எனக்கு தேதி சரியாக நியாபகம் இல்லை, எனது மூத்த மகள் பிறந்து 6 வருடம் கழித்து அவர்களுக்கு இடையே திருமணம் நடைபெற்றது. 1 ஆம் பிரதிவாதிக்கும் ராகவனுக்கும் இடையே திருமணம் எப்படி நடைபெற்றது என்பது குறித்து எனது வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான், எனக்கு அந்த விபரங்கள் சரியாக தெரியாது. 1 ஆம் பிரதிவாதிக்கும் ராகவனுக்கும் திருமணம் நடைபெற்ற விபரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் அவர்களுக்கு திருமணம் நடைபெற்று 15 நாட்கள் கழித்து எனக்கு தெரியும் தேதி, மாதம் வருடம் நியாபகம் இல்லை. எனக்கும் ராகவனுக்கும் இடையே நடைபெற்ற திருமணத்தை நாங்கள் பதிவு செய்தோமா என்றால் இல்லை எங்களுக்கு வீட்டில் திருமணம் நடைபெற்றது. எனது மகள்களான 2 மற்றும் 3 ஆம் வாதிகளின் பிறப்பு சான்றிதழை இந்நீதிமன்றத்தில் தாக்கல்

செய்யவில்லை என்றால் சரிதான், அச்சான்றிதழ்கள் எங்களிடம் இல்லை. எனது மகள்களான 2 மற்றும் 3 ஆம் வாதிகள் கம்பம், தேனி மாவட்டத்தில் பிறந்தார்கள். நான் 2 மற்றும் 3 ஆம் வாதிகளை பள்ளியில் சேர்க்கும் போது அவர்களின் பிறப்பு சான்றிதழ் கொடுத்து தான் சேர்த்தேன் என்றால் சரிதான். எனது கணவரின் வாரிசு சான்றிதழை கேரளா மாநிலத்தில் தான் வாங்க முடியும் என்றும், இங்கு இவ்வழக்கை தாக்கல் செய்ய முடியாது என்றால் சரியல்ல. இவ்வழக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு இந்நீதிமன்றத்தின் ஆள்வரை எல்லை இல்லை என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. நான் இங்கு தான் 50 ஆண்டு வருடங்களாக வசித்து வருகிறேன். நான் கேரளா மாநிலத்தில் சென்று வாரிசு சான்றிதழ் பெற்றால் வேறு வாரிசுகள் உள்ள விபரம் தெரிய வரும் ஆதலால் இவ்வழக்கை இந்நீதிமன்றததில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, நான் திருப்பூர் மாவட்டத்தில் தான் வசித்து வருகிறேன் ஆதலால் இங்கு தாக்கல் செய்துள்ளேன். எனது கணவரான ராகவனுக்கு நான் 2 மற்றும் 3 வாதிகள் மற்றும் 2 ஆம் பிரதிவாதி தவிர வேறு வாரிசுகள் உள்ளனர் என்றும் அதைனை மறைத்து இவ்வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ராகவனுக்கு நான் தான் முதல் மனைவி என்பதினை நிருப்பிக்க எந்த ஒரு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, எனது அடையாள அட்டைகளை தாக்கல் செய்துள்ளேன். போதிய ஆவணங்கள் தாக்கல் செய்யததால் இவ்வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

**Sd./R.Vaishnavi**
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்.